1993 ஏப்ரல் 6]

போது, அந்தப் பகுதியில் குடிசைவாழ் மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மத்திய அரசையோ, இராணுவத்தையோ தமிழக அரசு அணுகி, அந்த இடத்தை வாங்கி குடிசைவாழ் மக்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக் திட்டத்தினை விரிவு படுத்த முடியுமா என்றுதான். அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்யப்படவில்லையென்று சொல்கின்றார்கள். உள்ளாட்சித்துறையின் வாயிலாக பல்வேறு அடிப்படை வசதிகள் பரங்கிமலை கன்டோன்மென்ட்பகுதிகளுக்கு சிறப்பாக, இந்த அரசு பதவியேற்றதற்குப் பிறகு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது இருக்கிற பிரச்சினை குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக குடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்கின்ற திட்டம் இருக்கிறதா என்பதுதான். இதைப் பொறுத்தவரை, அந்த நிலத்தைப் பெற வேண்டும். பாதுகாப்புத் துறையின் கையிலே இந்த நிலம் இருக்கின்ற காரணத்தினால் இராணுவத்துறை இந்த நிலத்தை வாரியத்திற்கு மாற்றித் தருகிற பட்சத்தில் இப்படிப் பட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இது பற்றி பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 258, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

258—

வெட்டன்விடுதி ஆதிதிராவிட மாணவர் விடுதியில் கூடுதல் மாணவர்களைச் சேர்த்தல்.

*11185—சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, வெட்டன்விடுதி ஆதிதிராவிட மாணவர் விடுதிக்கு கூடுதலாக மாணவர்களைச் சேர்க்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1993 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. வரும் ஆண்டுகளில் இது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்போது ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை சதவீதம் படித்துக் கொண்டிருக்கிறார்கள்? அதில் படித்துக் கொண்டிருப்பவர்களுக்கு எத்தனை சதவீதம் ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டன்விடுதியிலே இருக்கிற ஸ்டெரெங்த்தை இன்கிரீஸ் செய்வதுதான் கேள்வி. ஒட்டுமொத்தமாக எத்தனை சதவீதம் படித்துக் கொண்டிருக்கிறார்கள், அதில் எத்தனைசதவீதம் இடம் அளிக்கப் பட்டிருக்கிறது என்பதற்கு தனிக் கேள்வி போடவும். வெட்டன் விடுதி பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி மேற்கொண்டு ஏதாவது கேட்க வேண்டுமென்றால் கேட்கவும்.

திரு. சி. சுவாமிநாதன்: வெட்டன்விடுதியைப் பொறுத்தவரை, அந்தப் பகுதியில் பெரும்பான்மையான மக்கள் ஆதிதிராவிடர்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அநேக மாணவர்கள் சென்ற ஆண்டு ஹாஸ்டல் வசதி கேட்டு மனு போட்டு, பல மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இதை அரசு கொள்கை ரீதியாக அறிவித்தால் தான் அந்த ஹாஸ்டலில் இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் எத்தனை சதவீதம் மாணவர்களுக்கு ஹாஸ்டலில் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது, அதை மேலும் அதிகரித்துக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிவதற்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு வாய்ப்பு இருக்கிறதா, இல்லையா என்பதை சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் மூலமாக புதுக்கோட்டை மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலரிடமிருந்து இந்த வெட்டன்விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்தும் கோரிக்கை பற்றி முன்மொழிவுகள்

1993 ஏப்ரல் 6]

கோரப்பட்டிருக்கின்றன. அரசுக்கு முன்மொழிவுகள் வந்த பிறகு 1993—94-ஆம் ஆண்டில் இது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 259, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

259—

பழனி நகரில் மீன் விற்பனை நிலையம்.

*9683—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மீன் வளர்ச்சிக் கழகத்தின் (Tamil Nadu Fisheries Development Corporation) சார்பாக, பழனி நகரில் மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழனியில் 1—2—1993 அன்று வினா தொடுத்துள்ள சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் மீன் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே பழனி நகரில் அரசு மீன் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக விற்பனை மையம் ஏற்படுத்தப்படுமா என்று கேட்ட எனக்கு, அந்த மையத்தை அங்கே ஏற்படுத்திக் கொடுத்தது மட்டுமல்லாமல், எனக்கு அதை திறக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு மீன் வளர்ச்சித் துறை அமைச்சருக்கும் என்னுடைய நன்றியை காணிக்கையாக்கி, இப்பொழுது அங்கு உலர் மீன்கள் மட்டும்தான் விற்கப்படுகிறது. அங்கே வறுத்த மீனும் விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். சிரிப்பு).